யாழ்ப்பாணம்

# ★ மத்திய மாகாணசபையும் கலைக்கப்படும்?

(கொழும்பு) மத்திய மாகாண சபை உறுப்பினர் ப. வ. திசநாயக் அடுத்த மாதம் 17ம் திகதியளவில் கலைக்கப்படலாமென முதலமைச்சர் சரத் தென்னக்கோனுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மத்திய மாகாண சபை உறுப்பினர் ப. வ. திசநாயக்காவுக்கும்,

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 8 இதழ் 339
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-1-1994

## தேர்தல் ஊழல்களை தடுக்க வெளிநாட்டு பார்வையாளர் தேவை-எதிரணி கோரிக்கை

(கொழும்பு) தென்மாகாண சபை ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் முறைகேடுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளை பார்வையாளராக அழைக்கப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ வேலியிலிருந்து படை பின்வாங்கியது

(மன்னார்) மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வேலியிலிருந்து சுமார் 150 யார் நீளமான பகுதியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டைக்காட்டுப் பகுதியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி தோல்வியை அடுத்து

# படையினரை திருப்திப்படுத்த புதிய ராணுவத்தளபதி முயற்சி!

## வடபகுதி முகாம்களுக்கு சூறுவளி விஜயம்!!

(கொழும்பு)

பூநகரி இராணுவ தகர்ப்பை அடுத்து படையினரை உற்சாகப்படுத்தி அவர்களைத் திருப்திப்படுத்தும் முயற்சியில் புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜெரிடி சில்வா ஈடுபட்டுள்ளார். அதன் முதல் கட்டமாக வடபகுதியிலுள்ள இராணுவ படை முகாம்களுக்கு அவர் அண்மையில் சூறுவளி விஜயம் ஒன்றை மேற்கொண்டார். வடபகுதியிலுள்ள இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினரையும் சந்தித்து அவர் நேரில் கலந்து பேசினர்.

இராணுவ சிப்பாய்கள் சேவைகளை அதிகாரிகள் ஆகியோரின் கவனிக்கப்படும் அபிவிருத்தி இராணுவத்தளபதி செய்வதற்காக புதிய திட்டம் எனவும் படையினர் மத்தியில் பேசும்போது அவர்களுக்கு உறுதியளித்

(4ம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவர் இடைநிறுத்தம் வாபஸ்

(கொழும்பு) கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 'ராக்கிங்' நடவடிக்கையை அடுத்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள 175 மருத்துவபீட மாணவர்களும் இன்று முதல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்கலாம் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மருத்துவபீட மாணவர்களின் இடைநிறுத்தம் தொடர்பாக விரும்பத்தகாத சம்ப

(4-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கியில் நகை அடைவுவைத்தோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள்வங்கியின் சகல கிளைகளிலும் அடகு வைத்தவர்களின் நகைகள் கொழும்பிலுள்ள மக்கள் வங்கி அடகு நகை மீட்புப் பிரிவில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

கொழும்பு நகை மீட்புப்

(4-ம் பக்கம் பார்க்க)

## இ. தொ. காவிலிருந்து 6 உறுப்பினர் நீக்கம்

(கொழும்பு) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட மத்திய மாகாணசபையின் எட்டு உறுப்பினர்களில் ஆறுபேர் நிரந்தரமாக நீக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்திய குழு,

(4-ம் பக்கம் பார்க்க)

## செல்லச்சாமி கட்சியிலிருந்து தொடர்ந்தும் இடைநிறுத்தம்

(கொழும்பு) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட எம். எஸ். செல்லச்சாமியின் இடைநிறுத்தல் தீர்மானம்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மக்கள் கஷ்ட நிலையில்

**- அத்தாவுட செனவிரத்ன**

(கொழும்பு) வடபகுதியில் தற்போது உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் அங்குவாழும் மக்கள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

அவசரகால நிலையை நீடிக்கும் பிரேரணை மீதான நாடாளுமன்ற விவாதத்தில் நேற்று உரையாற்றிய திரு அத்தாவுட செனவிரத்ன இவ்வாறு கூறினர்.

(4ம் பக்கம் பார்க்க)

## கெரில்லா போரில் புலிகளுக்கு வெற்றி

**-லங்காதீப**

(கொழும்பு) வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்தங்களில் கெரில்லா முறையில் விடுதலைப் புலிகள் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர் என்று 'லங்காதீப' பத்திரிகையின் அரசியல் விமர்சனக்கட்டுரையாளர் குறிப்பிடு

(4ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலநிலை மேலும் நீடிப்பு

(கொழும்பு) அவசரகாலநிலையை மேலும் நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 62 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## றம்பாவ குண்டு வெடிப்பு பொலிஸ் விசாரணை ஆரம்பம்

(அனுராதபுரம்) அனுராதபுரம் மாவட்டம் றம்பாவ காவல் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் சம்பந்தமாக பூரண விசாரணை நடைபெற்று வருவதாக அரசு நேற்று அறிவித்தது.

சிரேஷ்ட உதவி இரசாயனப் பரிசோதகர் டபிள்யூ. டி. ஜி. குணதிலக தலைமையிலான குழுவொன்று விசாரணைகளை நடாத்தி வருகின்றது.

வடமத்தியமாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜெமினி ரன்தெனியாவின் தலைமையின்கீழ் உயர்மட்ட பொலிஸ் குழுவும் விசாரணையை மேற்கொண்டு வரு

(4-ம் பக்கம் பார்க்க)

## மயிலணி ஷெல் தாக்கு: காயமடைந்தவர்களுள் இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்) பலாலி இராணுவ முகாமிலிருந்து சுன்னாகம் மயிலணி வடக்கு பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின்போது படுகாய

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

8 x 4 ஒரு நூல் தகடு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: மில்க்வைற். (எ 3777)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். ரீ. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 739)

### மணமகன் தேவை

இந்து மதம் பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்குற்ற மற்ற படித்த 24 வயது பெண்ணுக்கு மணமகன் தேவை. G. V. Kanesalinkam, C/o Paramanatha, Uyarappulam, Anaikoddai. C 735

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### வாருங்கள் திருத்திப்பாருங்கள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப்பாகங்களுக்காக தமிழ் நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டிலைா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-738)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) a குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலகியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குழப்பம், இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (சி-689)

## வைத்தியர் தேவை

யாழ் நகரின் மத்தியில் இயங்க இருக்கும் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு (CLINIC) குழந்தை வைத்தியத்தில் அனுபவம்மிக்க வைத்தியர் (M. B. B. S.) முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ கடமையாற்றத் தேவை. ஓய்வுபெற்றோர், இடம்பெயர்ந்தோர் விரும்பத்தக்கது.

★ 31-01-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்

விளம்பர இலக்கம் 3776

C/o ஈழநாடு

யாழ்ப்பாணம்

(எ-3776)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## தொழிலாளர் கல்விக் கழகத்தின் துலங்கல் !!!

## சஞ்சிகை வெளியீட்டு விழா

### கைலாசபதி கலையரங்கம்

யாழ். பல்கலைக்கழகம்

22-01-1994 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி

தலைமை:

**திரு. வேலுப்பிள்ளை சிவநேசன்**

(தலைவர், தொழிலாளர் கல்விக் கழகம்)

அனைவரையும்

அன்புடன் அழைக்கின்றோம்

தொழிலாளர் கல்விக் கழகம்

யாழ். பல்கலைக்கழகம். (சி 741)

## இன்று

(கொழும்புத்துறை)

மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. ம. வரதேவா ஓய்வு பெற்றதையடுத்து அவரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று மானிப்பாயில் வங்கி முகாமையாளர் திரு ம. நாகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது. -164

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக சமூகப் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 21ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தின் "வணிக ஒளி" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு எ. ஜெயரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சா. புலேந்திரன், தமிழீழக் கல்விக்கழகத்தைச் சேர்ந்த திரு. எ. அருண் மாஸ்டர், வர்த்தக வள ஆலணி ஆசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். -சி

## இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராகவேந்திரா சுவாமிகள் மிருதிகா, பிருந்தாவன இசை ஆராதனை எதிர்வரும் 24ம் திகதி திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு நல்லூர்க்கோவில் வீதியில் அமைந்திருக்கும் அவரது மிருதிகாவில் நடைபெறும். )162

## விசேட செயலமர்வு

(உடுவில்)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் (1993 டிசம்பர்) ஏனைய பாடங்களில் சித்தியடைந்து கணித பாடத்தில் மட்டும் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கான விசேட செயலமர்வு ஜனவரி 28ம் திகதி கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்ட கணித - விஞ்ஞான மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களை மேற்படி நிலையத்தில் அல்லது கரணவாயிலுள்ள வடமராட்சிக்கான மூலவள நிலையத்தில் ஜனவரி 25ம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ளலாம் என விஞ்ஞானபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். -109

## காரைநகர் கம்பன் கழகம்

# கம்பன் விழா 1994

இடம்: இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்

காலம்: 21, 22, 23 - 01 - 1994

காலை, மாலை

22-01-94 சனிக்கிழமை காலை 9 மணி முதல்

தலைவர்: திரு. அ. பஞ்சலிங்கம் B Sc. Dip-in-Ed. Idepa (அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

மங்கள விளக்கேற்றல்: திரு. ஆ. சுப்பிரமணியம், திரு. எம். கிருபாலன்

கடவுள் வாழ்த்து: திரு. மு. சுந்தரலிங்கம்

வரவேற்புரை:

தொடக்கவுரை: திரு. ந பரமசிவம் B A Dip-in-Ed. (அதிபர், யாழ்நகர் கல்லூரி, காரைநகர்)

தலைமை உரை

### ★ கம்பன் இசையமுது ★

இசை அளிப்பவர்: திரு நடேசன் சிவசண்முகமூர்த்தி B. A.)

அணிசெய் கலைஞர்கள்:

திரு. ஆர் எஸ் கேசவமூர்த்தி — வயலின்

திரு. தி. சண்முகசுந்தரம் — மிருதங்கம்

### ★ கலைதெரி அரங்கம் ★

தலைவர்: இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர்

பொருள்: 'எதை எதை வியப்பம் என வரு வளப்பம்'

கம்பனின் கடவுள் வாழ்த்துக்கள்

திரு. க. சொக்கலிங்கம் (M.A.)

கம்பனின் நாடக உத்திகள்

திரு. கா சோமசுந்தரம் (B A.)

கம்பனின் அரசியல் ஆலோசனைகள்

பண்டிதர் க. சச்சிதானந்தம்

மாலை நிகழ்ச்சிகள் 4 மணி முதல்

தலைவர்: கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்து நாகரிகத்துறை யா. பல்கலைக்கழகம்)

மங்கள இசை: திரு. இராம. சண்முகதாஸ் குழுவினர்

மங்கள விளக்கேற்றல்: திரு. பொன் சுந்தரலிங்கம், திரு. ந. யோகநாதன்

கடவுள் வாழ்த்து: செல்வி சாரதா சச்சிதானந்தம்

வரவேற்புரை:

தொடக்க உரை: திரு. சுந்தரம் டிவகலாலா B A. (Hons) (உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்.)

தலைமை உரை:

### ★ இலக்கியச் சோலை ★

சோலைக் கிழவோன்:

கலாநிதி காரை, செ. சுந்தரம்பிள்ளை

சோலைக் காவலன்: கவிஞர் மன்னவன் கந்தப்பு (தலைவர், வடமராட்சி கம்பன் கழகம்)

சோலைக் காட்சி: பேசாப் பொருட்கள் பேசத் துணிந்தால்

| | |
|---|---|
| எழுந்த தூள்: | திரு. த நாகேஸ்வரன் |
| அழைத்த கொடி: | செல்வி ப நாமகள் |
| முறிந்த தனு: | திரு. சி. சண்முகதாஸ் |
| தொடுத்த கணை: | திரு. ச. மணிமாறன் |
| எடுத்த அடி: | திரு. இ. ஸ்ரீதரன் |
| தொடுத்த கணை | செல்வி ச. சாந்தினி |
| அழுத்த புகழ்: | திரு. ஸ்ரீ. பிரசாந்தன் |
| கவித்த முடி: | திரு. க ஜெயநிதி |

படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள்

"இவ்வாறு படைத்தாயே ஏன்"

| | |
|---|---|
| படைத்தவனாக | திரு. இ. ஜெயராஜ் |
| கூனியாக | திரு. எம். எஸ் ஸ்ரீதயாளன் B A. |
| கைகேயியாக | திருமதி மனோன்மணி சண்முகதாஸ் M A. |
| சூர்ப்பனகையாக | திரு. கே. இராஜரத்தினம் |
| வாலியாக | திரு. த. கலாமணி M. A. |
| விடணனாக | பேராசிரியர் அ. சண்முகதாஸ் |
| கும்பகர்ணனாக | கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை |
| இராவணனாக | திரு. பொன். கணேசமூர்த்தி |

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

த. சிவகுமாரன்

அமைப்பாளர்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

19 - 01 - 1994 புதன்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட பரிசுச் சீட்டுகளின் இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| முதலாம் | பரிசு : | 13268 | ரூபா 25000/- |
| இரண்டாம் | பரிசு : | 7448 | ரூபா 15000/- |
| மூன்றாம் | பரிசு : | 11403 | ரூபா 10,000/- |
| ஆறுதல் | பரிசுகள் : | தலா | ரூபா 1000/- |

39238 25450 15758 6312 26067 3711

39434 28023 28303 9832

இச்சீட்டிழுப்பின்போது இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகள் மற்றும் ஒலி ஒளி அமைப்புக்கள் வீடியோ புகைப்படம், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றுக்கான செலவுகளை அன்பளிப்பாக தந்து உதவிய எங்கள் பிரதேச வர்த்தகப் பெருமக்களுக்கும் மற்றும் நிகழ்ச்சியினை ஒழுங்காக நடத்துவதற்கு ஒத்துழைத்த பொதுமக்களுக்கும் எமது நெஞ்சில் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்

சு. தனபாலசிங்கம், செயலாளர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.

என். கே. குலசிங்கம், தலைவர், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.

(எ-3778)

விளம்பர அன்பளிப்பு:

## சீதா நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

27/ஏ அர்ச்சுன வீதி,

(ஸ்ரான்லி வீதி)

யாழ்ப்பாணம் (சி-740)

